பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 11 வெள்ளிக்கிழமை 25.06.2021 கதிர் 98

## முல்லைத்தீவில் வெடி விபத்து! ஒருவர் காயம்

முல்லைத்தீவுப் பகுதியில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப் 2



400 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேருடன் முடக்கப்பட்டுள்ள கரணவாய் கிராம சேகவர் பிரிவில் இராணுவத்தினரும், பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.
(படம்:- எஸ்.நிதர்ஷன்)

# கொரோனாவின் தீவிரத்தால் கரணவாய் முற்றாக முடக்கம்

## மேலும் 9 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தல்



எஸ்.நிதர்ஷன்

கொரோனா வைரஸ் தொற்றின் தீவிரத்தால் யாழ்ப்பாணம் உள்ளிட்ட 5 மாவட்டங்களின் 10 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இன்று காலை 6 மணி முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதனடிப்படையில், யாழ். மாவட்டத்தின் கரவெட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரணவாய் கிராம உத்தியோகத்தர் பிரிவும், மன்னார் 2

# விஸ்தரிக்கும் ராஜபக்ஷ குடும்ப ஆட்சி: ஜூலை 6இல் எம்.பியாகின்றார் பஸில்

## அமைச்சுப் பதவியும் காத்திருப்பு



அமெரிக்காவில் இருந்து நேற்று நாடு திரும்பியுள்ள முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, விரைவில் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்கவுள்ளார் என்று அரசியல் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எப்போது அவர் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்பது என்பது குறித்து சிறிலங்கா பொதுஜன முன்னணிக்குள் தற்போது கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்றன எனக் கூறப்படுகின்றது. 2

## வவுனியா ஆடைத்தொழிற்சாலையில் தடுப்பூசி பெற்ற 15 பேருக்கு ஒவ்வாமை

(வவுனியா நிருபர்)

வவுனியா, இராசேந்திரங்குளம் ஆடைத் தொழிற்சாலையில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்ட 15 பேர் ஒவ்வாமை காரணமாக ஆடைத்தொழிற்சாலை சிகிச்சை கூடம் மற்றும் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் இன்று சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் பணியாற்றுபவர்களுக்கு இராணுவத்தினர் ஊடாக 2



## ஒட்டுமொத்த அரசியல் கைதிகளையும் கோட்டாவால் ஏன் விடுவிக்க முடியாது?

### அனந்தி சசிதரன் கேள்விக்கணை

(இ.கலையமுதன்)

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் விவாதத்தால் 16 அரசியல் கைதிகளை விடுவிக்க முடியும் என்றால் ஏன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவாலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவாலும் ஒட்டுமொத்த அரசியல் கைதிகளையும் விடுவிக்க 2



## இலங்கைக் கடற்பரப்பில் இன்னொரு கப்பலில் தீ



இலங்கையின் தென் கடற்பரப்பில் மகா ராவணா வெளிச்ச வீட்டிலிருந்து கிழக்கே 480 கடல் மைல் தொலைவில் இந்து சமுத்திரப் பகுதியில் 2

## நீதிமன்றத்தின் உத்தரவில் நல்லூர் விடுதி முற்றுகை!

### இரு பெண்கள் உள்ளிட்ட அறுவர் கைது



யாழ். நல்லூர் கோயில் வீதியில் கலாசார சீரழிவு நடவடிக்கைகள் இடம்பெற்றன என்று கூறப்படும் விடுதி ஒன்று யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் இன்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

அதன்போது, குறித்த 2

## கொரோனாச்சட்டத்தை மீறிய மேலும் 743 பேர் சிக்கினார்கள்

### பொலிஸ் பேச்சாளர் தகவல்



நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 743 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண 2

## கொரோனாவின் தீவிரத்தால்.................

(முதலாம் பக்க தொடர்ச்சி)

பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலைமன்னார் பியர் கிழக்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் தனிமைப் படுத்தப்பட்டுள் ளன.

அத்துடன், பதுளை மாவட்டத்தின் வெலிமடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறிலங்கபொல கிராம உத்தியோகத்தர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் பெல்மடுல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொத்தகந்த கிராம உத்தியோகத்தர் பிரிவின் நொரகல்லவத்த மேல் பிரிவு, பனாவென்ன கிராம உத்தியோகத்தர் பிரிவின் பெல்மடுல்ல தோட்டத்தின் முதலாம் பிரிவு, பனாவென்ன கிராம உத்தியோகத்தர் பிரிவின் பெல்மடுல்ல தோட்டத்தின் 5 ஆம் இலக்க பிரிவு, கபுஹென் தொட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவின் பெல்மடுல்ல தோட்டத்தின் 5 ஆம் இலக்க பிரிவு ஆகியன தனிமைப்படுத்தப்பட்டுள் ளன.

களுத்துறை மாவட்டத்தின் மத்துகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யட்டதொல கிராம உத்தியோகத்தர் பிரிவின் அம்பத்தென்னவத்த பிரதான பிரிவு மற்றும் க்ளேபிரிவுஆகியனதனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா மேலும் கூறினார்.

இதனிடையே, தனிமைப்படுத்தப்பட்டிருந்த கொழும்பு மாவட்டத்தின் கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 233ஆம் இலக்க தோட்டம் மற்றும் மஹவத்த வீதி ஆகியன தனிமைப்படுத்தலிலிருந்து இன்று காலை 6 மணிக்கு விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## நீதிமன்றத்தின்.......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

விடுதியில் இருந்து இரண்டு பெண்கள், 3 இளைஞர்கள் மற்றும் விடுதி உரிமையாளர் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நல்லூர் கோயில் வீதியிலுள்ள விடுதியில் கலாசார சீரழிவு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடு களுக்கமைய, அந்த விடுதியைச் சோதனையிடுவதற்கான அனுமதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் பெறப்பட்டது.

இதையடுத்து யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சப்இன்ஸ்பெக்டர் மேனன் தலைமையிலான பொலிஸ் பிரிவினர் இன்று அந்த விடுதியைச் சுற்றிவளைத்து அங்கிருந்த இரண்டு பெண்கள் உள்ளிட்ட 6 சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் குருநகர், மானிப்பாய் மற்றும் உரும்பிராயைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கொரோனாச்சட்டத்தை....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

தெரிவித்தார். இது தொடர்பில் இன்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-
குளியாப்பிட்டி பகுதியிலேயே பெருமளவானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, மாத்தளையில் 78 பேரும், கண்டியில் 66 பேரும், புத்தளத்தில் 50 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவோரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன.

முகக்கவசம் அணியத் தவறுவோர் தொடர்பில் அதிகக் கவனம் செலுத்தப்படுகின்றது.

எனவே, தனிமைப்படுத்தல் சட்ட விதிகளைப் பின்பற்றுமாறு மக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்-என்றார்.

## வவுனியா ஆடைத்......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

சினோபோர்ம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வருகின்றன. இதன்போது 15 பேர் ஒவ்வாமை காரணமாகப் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதில், வவுனியா, இராசேந்திரங்குளம் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் சிலர் தடுப்பூசி ஏற்றப்பட்ட நிலையில் ஒவ்வாமை காரணமாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சேர்க்கப்பட்டவர்களில் பலர் உடல் நிலை சீரடைந்த நிலையில் வீடுகளுக்கும் திரும்பியுள்ளனர்.

இன்னும், சிலருக்கு ஆடைத்தொழிற்சாலையில் உள்ள சிகிச்சை கூடத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டு வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் எனவும் சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர். (100)

## விஸ்தரிக்கும் ராஜபக்ஷ...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

ஜூலை 6ஆம் திகதி அவர் பதவியேற்பது பொருத்தமானதாக இருக்கும் என்று கட்சிக்குள் ஒரு தரப்பினர் கூறியுள்ளனர் எனவும், ஆனால் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் பின்னர் பதவியேற்பதே பொருத்தமானது என்று மற்றுமொரு தரப்பினர் தெரிவித்துள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஸ்ரீலங்காபொதுஜன முன்னணியின் நிறுவுநரும் தேசிய அமைப்பாளருமான பஸில் ராஜபக்ஷ, தேசியப்பட்டியல் ஊடாகவே நாடாளுமன்ற உறுப்பினராகவுள்ளார். இதற்காக ஜயந்த கெட்டகொட அல்லது பேராசிரியர் ரஞ்சித் பண்டார ஆகியோரில் ஒருவர் பதவி விலகி பஸிலுக்கு இடம் வழங்கவுள்ளனர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினரானதும் பொருளாதார விடயங்கள் தொடர்பான அமைச்சராகப் பதவியேற்கலாம் என்று கூறப்படுகின்றது.

## ஒட்டுமொத்த அரசியல்....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

முடியவில்லை?

- இவ்வாறு ஈழத் தமிழர் சுயாட்சி கழகத்தின் செயலாளர் நாயகமும் முன்னாள் வடக்கு மாகாண சபையின் அமைச்சருமான அனந்தி சசிதரன் கேள்வி எழுப்பினார்.

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்டகாலமாக சிறைகளில் இருந்த அரசியல் கைதிகளில் ஒரு தொகுதியினர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இது மகிழ்ச்சியான விடயமாகும்.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் வருடக்கணக்கில் போராட்டங்கள் நடைபெற்ற நிலையிலேயே அவர்கள் விடுவிக்கப்பட்டது உண்மையில் மகிழ்ச்சியான விடயமே. இவை தவிர மிகுதியாக உள்ள அரசியல் கைதிகளும் எந்தவித பாரபட்சமும் இன்றி விடுதலை செய்யப்பட வேண்டும். சிங்கள, முஸ்லிம்கள் கூட ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு உதவினர் என்ற குற்றச்சாட்டில் இன்றும் பலர் அரசியல் கைதிகளாக உள்ளனர். அவர்களையும் விடுவிக்க வேண்டும். ஒரு சாதாரண விளையாட்டுத்துறை அமைச்சரால் விவாதம் ஒன்றை நடத்தி 16 அரசியல் கைதிகளை விடுவிக்க முடியும் என்றால் ஏன் ஜனாதிபதியாலும் பிரதமராலும் ஒட்டுமொத்த அரசியல் கைதிகளையும் விடுவிக்க முடியவில்லை என்ற கேள்வி எமக்குள் எழுகின்றது.

இரகசியத் தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டு பெயர் வெளியிடப்படாமல் இருந்தவர்கள் மற்றும் சரணடைந்து காணாமல்போனவர்கள் பற்றிய விவரங்களையும் அரசு வெளிப்படுத்த வேண்டும் - என்றார்.

## முல்லைத்தீவில்.....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

பட்டுள்ளார்.

முல்லைத்தீவு சுவாமி தோட்டப் பகுதியிலுள்ள தென்னந்தோட்டத்தைத் துப்புரவுசெய்துகுப்பைகளுக்குத் தீ மூட்டியபோதே குப்பைக்குள் இருந்த வெடிபொருள் வெடித்துச் சிதறியதில் குப்பைக்குத் தீ மூட்டியவர் காயமடைந்துள்ளார்.

அதையடுத்து அவர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இன்று பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், சம்பவ இடத்தில் மேலதிக விசாரணைக்காகச் சென்றபோது குப்பை மூட்டப்பட்ட பகுதிக்கு அண்மையில் இருந்து வெடிக்காத நிலையில் எறிகணை ஒன்றையும் மீட்டுள்ளனர்.

## இலங்கைக் கடற்.......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

கொள்கலன் கப்பல் ஒன்று தீ விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

கொழும்புத் துறைமுகத்திலிருந்து சிங்கப்பூர் நோக்கிப் பயணித்தலைபீரியா நாட்டுக்குச் சொந்தமான ‘எம்.எஸ்.சி மெசீனா’ கப்பலே இவ்வாறு தீ விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

அந்தக் கப்பலின் இயந்திரப் பிரிவில் நேற்றிரவு தீ ஏற்பட்டுள்ளது எனச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தீயைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்குத் தயாராகியுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் ‘காலைக்கதிர்’ சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**விளம்பரத் தொடர்புகளுக்கு -**
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@ gmail.com
தொலைபேசி இலக்கம்- 076 443 8622






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## துமிந்த விடுதலையால் சர்ச்சை

**இப்பத்தியில் நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி, மரணதண்டனைக் கைதி துமிந்த சில்வாவுக்கு மன்னிப்பு அளித்து விடுவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நடவடிக்கை தென்னிலங்கையில் பெரும் அரசியல் அதிர்வுகளை – பக்க விளைவுகளை – ஏற்படுத்தத் தவறவில்லை.**

**துமிந்த சில்வாவுக்கு எந்த அடிப்படையில் ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியுள்ளார், அதில் உள்ள நியாயத்தன்மை யாது என்பன தொடர்பில் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் பகிரங்கமாகக் கேட்டிருக்கின்றது. ஜனாதிபதி என்ன பதில் சொல்லப் போகின்றார் என்பதுதான் கேள்வி.**

**இன்றிரவு நாட்டு மக்களுக்கு உரையாற்றவிருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அந்த உரையில் தமது பதிலை – விளக்கத்தை – தெரிவிப்பாரோ என்னவோ?**

**இலங்கையில் சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட நீதிமன்றம் ஒன்றினால் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்ட எவருக்கும் மன்னிப்பு அடிப்படையில் விடுதலை வழங்கவோ, குற்றத் தீர்ப்பைக் குறைக்கவோ ஜனாதிபதிக்கு உரிமையுண்டு. இது ஜனாதிபதிக்குரிய தனித்துவமான – விசேடமான – தற்துணிபுடன் கூடிய – உரிமை. அதை யாரும் கேள்விக்கு உட்படுத்த முடியாது என்பது சரிதான். அந்த முடிவுக்கு – தீர்மானத்துக்கு – காரணங்கள் காட்டுங்கள் என்று கேட்க முடியாது என்பது உண்மைதான்.**

**எனினும் இந்தப் பொது மன்னிப்பு அதிகாரத்தை ஜனாதிபதி பிரயோகிப்பது தொடர்பில் சில சட்ட முறைமைகள் உள்ளன. அவை தவறாது பின்பற்றப்பட வேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு இவ் விடயத்தில் அதிகாரம் இருக்கின்றது என்பதற்காக அதனை எதேச்சாதிகாரமாக அவர் பிரயோகிக்க முடியாது.**

**அதுவே இப்போது விடயம். துமிந்த சில்வாவிற்கு மன்னிப்பு விடுதலை வழங்கும் விவகாரத்தில் இந்த சட்ட ஒழுங்குகள் முறையாகப் பின்பற்றப்பட்டனவா அல்லது ஜனாதிபதி தம்மிஷ்டப்படி துமிந்த சில்வாவை விடுவித்துள்ளாரா என்பதுதான் இப்போது கேள்வி.**

*** வழக்கமாக ஒரு தண்டனைக் கைதியை மன்னிப்புத் திட்டத்தின் கீழ் விடுவிப்பதாயின் அதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட குற்றத் தீர்ப்பை வழங்கிய நீதிபதியின் அல்லது நீதிபதிகளின் விசாரணை அறிக்கை ஒன்று கோரப்பட வேண்டும்.**

*** அதன் பின்னர். அக்கைதி தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட வேண்டும்.**

*** அதற்குப் பிறகு, நீதி அமைச்சரின் பரிந்துரை பெறப்பட வேண்டும்.**

**– இந்த மூன்றும் சட்டம் தேவைப்படுத்தும் அடிப்படை விடயங்களாகும்.**

**இந்த மூன்று விடயங்களும் நிறைவு செய்யப்பட்டனவா, அவற்றின் விவரங்களை வெளிப்படுத்துங்கள் என அரசைக் கோரியிருக்கின்றது இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்.**

**துமிந்த சில்வாவின் விடுதலை தொடர்பில் அவரது வழக்கை விசாரித்து மரண தண்டனையை விதித்த 'ட்ரயல் அட் பார்' நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளிடம் அறிக்கை ஏதும் கோரப்பட்டதா என்பதில் சந்தேகம் இருப்பதாகக் கூறப்படுகின்றது.**

**அடுத்தது, சட்டமா அதிபரின் பரிந்துரை. பதவியில் இருந்த சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா பதவியை விட்டு இறங்கி, புதியவர் சஞ்சீவ் ராஜரட்ணம் பதவியேற்ற கையோட இந்த மன்னிப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. சட்டமா அதிபரின் மாற்றத்துக்காக இந்த விடுவிப்புக் காத்திருந்ததா என்ற கேள்வி எழுகின்றது.**

**மூன்றாவது நீதி அமைச்சரின் பரிந்துரை.**

**துமிந்த சில்வாவின் விடுதலைக்கும் எனக்கும் எதுவும் தொடர்பு இல்லை; எனக்கு எதுவும் தெரியாது என்று கைவிரித்திருக்கின்றார் நீதி அமைச்சர் அலி சப்றி.**

**அப்படி என்றால் சட்டப்படி பெற வேண்டிய நீதி அமைச்சரின் பரிந்துரையைப் பெறாமல் தம்பாட்டில் இந்தக் கைதியை – துமிந்த சில்வாவை – விடுவிக்கும் உத்தரவை ஜனாதிபதி வழங்கியிருக்கின்றாரா என்ற கேள்வி எழுகின்றது.**

**2015 இல் நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்த கையோடு தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும் முயற்சி ஒன்று கூட்டமைப்பின் அழுத்தத்தோடு முன்னெடுக்கப்பட்டது. அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆசியும் கூட அதற்கு இருந்தது. ஆனால் அப்போது நீதி அமைச்சராக இனவாதப் போக்குடன் செயற்பட்ட விஜயதாஸ ராஜபக்ஷ பதவி வகித்தமையால் அந்த முயற்சியை முன் நகர்த்த முடியாமல் போயிற்று என்பது தெரிந்த விடயம்.**

**அப்படியான ஒரு பதவியில் அலி சப்றி அலங்கரித்திருக்கையில் துமிந்த சில்வாவின் விடுதலைக்கும் எனக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று அவர் கூறுகின்றமை, இந்த விடுவிப்புத் தொடர்பான சட்ட ஒழுக்குகளில் எங்கோ இடிப்பதாக ஒரு கருத்தைத் தருகின்றது.**

**ஆட்சித் தரப்பு நாட்டுக்கும் மக்களுக்கும் இவ் விடயத்தில் சரியான விளக்கங்களைத் தரக் கடமைப்பட்டுள்ளது.**

## மன்னார் முசலி கடற்கரையில் 1,363 கிலோ கிராம் மஞ்சள் மீட்பு





**ந.லோகதயாளன்.**

யாழ்ப்பாணம், ஜூன் 25

மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சிலாவத்துறை கடற்கரை பகுதியில் வைத்து நேற்று வியாழக்கிழமை அதிகாலை 1,363 கிலோ மஞ்சள் கட்டி மூடைகள் மீட்கப்பட்டன. மூவர் கடற்படையினர் மற்றும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாவத்துறை பகுதியில் உள்ள அல்லிராணிக் கோட்டைக்கு மேற்கு பகுதியில் உள்ள கடற்பரப்பில் வைத்து சிலாவத்துறை பொலிஸார் மற்றும் கடற்படையினர் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது 26 மூடைகளில் பொதி செய்யப்பட்டிருந்த 1,363 கிலோ உலர்ந்த மஞ்சள் கட்டி மூடைகளை கைப்பற்றியதோடு, சட்ட விரோதமான முறையில் அவற்றைக் கொண்டு வந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 3 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்கள் பயன்படுத்திய படகு மற்றும் படகின் வெளியிணைப்பு இயந்திரமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட நபர்களிடம் மேலதிக விசாரணைகளை சிலாவத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு சரியான முறையில் வடக்கில் வழங்கவில்லை

**ந.லோகதயாளன்.**

யாழ்ப்பாணம், ஜூன் 25

முன்பள்ளி ஆசிரியர்களாக வடக்கு மாகாணத்தில் 2 ஆயிரத்து 651 பேர் உள்ளபோதிலும் 301பேருக்கு மட்டுமே அரசின் 2 ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகின்றது என முன்பள்ளி ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்குக் கொரோனாக் காலத்தில் 2 ஆயிரத்து 500 ரூபா விசேட நிதி வழங்க அரசு அறிவித்திருந்தது. இதற்கமைய வடக்கில் பணியாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களில் நிரந்தர அரச நியமனம் பெற்றவர்கள் தவிர்ந்த ஏனைய அனைவருக்கும் இந்த 2 ஆயிரத்து 500 ரூபா விசேட நிதி வழங்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டது.

இதற்கமைய வடக்கில் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் நிரந்த ஆசிரியர்கள் 44 பேரினதும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் பணியாற்றும் 530 ஆசிரியர்களையும் விலக்கி மீதம் உள்ள 2 ஆயிரத்து 651முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் இந்த 2 ஆயிரத்து 500 ரூபா விசேட நிதி அரசு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

இருந்தபோதும் வடக்கு மாகாண கல்வி அமைச்சால் மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா வழங்கப்படும் காரணத்தை காட்டி இந்த 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளும் 2 ஆயிரத்து 147 ஆசிரியர்களும் நிராகரிக்கப்பட்டு எஞ்சிய 504 ஆசிரியர்கள் மட்டுமே பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டனர். பரிசீலனைக்கு உட்பட்ட 504 ஆசிரியர்களில் க.பொ.த. சாதாரணத்தை பூர்த்தி செய்த அல்லது முன்பள்ளி டிப்ளோமா கற்கை பூர்த்தி செய்த ஆசிரியர்கள் மட்டுமே இந்தக் கொடுப்பனவிற்கு தகுதியானவர்களாக இனம் காணப்பட்டனர்.

இதற்கமைய வடக்கு மாகாணத்தில் இருந்து இறுதி செய்யப்பட்ட பட்டியலின் பிரகாரம் 301 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும்தான் தற்போது 2 ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. இதே நேரம் இலங்கையிலேயே மாகாண சபையால் உச்ச பட்ச கொடுப்பனவாக 6 ஆயிரம் ரூபா வடக்கு மாகாண சபையில் மட்டுமே வழங்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியா ஆடைத் தொழிற்சாலையில் தடுப்பூசி; தமிழ் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு



வவுனியா, மூன்றுமுறிப்பு ஆடைத் தொழிற்சாலையில் கொவிட் தடுப்பூசி ஏற்றும் செய்தியை அறிக்கையிடச் சென்ற தமிழ் ஊடகவியலாளருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தின் மூன்றுமுறிப்பு மற்றும் இராசேந்திரங்குளம் பகுதிகளில் உள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் பணியாற்றுபவர்களுக்கு இராணுவத்தினர் ஊடாக நேற்று (வியாழக்கிழமை) கொவிட் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

இதன்போது மூன்றுமுறிப்பு ஆடைத் தொழிற்சாலையில் கொவிட் தடுப்பூசி ஏற்றும் செயற்பாட்டை செய்தி அறிக்கையிடச் சென்ற தமிழ் ஊடகவியலாளருக்கு ஆடைத் தொழிற்சாலை நிர்வாகத்தால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காலையில் சென்ற சிங்கள ஊடகவியலாளர்கள் படம், வீடியோ எடுப்பதற்கும் செய்தி அறிக்கையிடவும் குறித்த ஆடைத் தொழிற்சாலை நிர்வாகம் அனுமதி வழங்கியிருந்தது. வவுனியா மாவட்டத்தில் மூவின மக்களும், சிங்கள – தமிழ் மொழி ஊடகவியலாளர்களும் இணைந்து பணியாற்றுகின்ற போது குறித்த ஆடைத் தொழிற்சாலை நிர்வாகத்தின் செயற்பாடு பிரிவினையை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக அனுமதி மறுக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (100)

## அமைச்சர் வாசுதேவ வைத்தியசாலையில்!



நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாரடைப்புக்கு சிகிச்சைப் பெறுவதற்காகவே அவர் இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, 'ஸ்டென்ட்' அறுவை சிகிச்சை செய்ய திட்டமிட் டுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



## அமெரிக்காவில் சரிந்து நொறுங்கிய 12 மாடிக் கட்டடம்

# இறப்புகள் அதிகரிக்கலாமென அச்சம்!

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் மியாமி கடற்கரை அருகே 12 மாடிகளை கொண்ட குடியிருப்பு வளாகம் உள்ளது. இலத்தீன் அமெரிக்காவின் பராகுவே, கொலம்பியா, வெனிசுலா, ஆர்ஜெண்டினா, உருகுவே நாடுகளைச் சேர்ந்தவர்கள் அதில் அதிகம் தங்கி இருந்தனர். 1981 களில் கட்டப்பட்ட இந்த கட்டடத்தின் பராமரிப்பு பணி நடைபெற்று வந்தது.

இந்த நிலையில் இந்தக் கட்டடம் நேற்று அதிகாலையில் சீட்டுக்கட்டு போல் சரிந்துவிழுந்தது. கட்டடத்தின் ஒரு பகுதி முழுவதும் சரிந்தது. குடியிருப்பின் வடகிழக்கு பகுதியில் உள்ள சுமார் 55குடியிருப்புகள் இடிந்து சரிந்துள்ளன. இந்த கோர விபத்தில் நூற்றுக்கும் மேற்பட்டார் சிக்கி உள்ளதால் மீட்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இடிபாடுகளில் சிக்கிய 12 வயது சிறுவன் உள்பட 50 இற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளனர். 100 இற்கும் மேற்பட்டோர் இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. ஆனால், உயிரிழப்பு எண்ணிக்கை இதுவரை அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படவில்லை. பலர் காயமடைந்துள்ளனர் அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் நடந்தபோது கட்டடத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லை. காணாமல் போனவர்களை எங்களால் உறுதிப்படுத்த முடியவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கட்டடம் இடிந்து விழுவதற்கு என்ன காரணம் என்று அதிகாரிகள் இன்னும் தீர்மானிக்கவில்லை. மியாமி பொலிசார் விசாரணையைத் தொடங்கியுள்ளனர். மீட்புப் பணிகள் முழுமையடைந்த பின்னரே உயிரிழப்பு மற்றும் காயமடைந்தோர், சேதம் குறித்த சரியான தகவல் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1981 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்த கட்டிடம், 1990 களில் இருந்து ஆபத்தான கட்டடமாக உள்ளது என 2020 ஆம் ஆண்டில் பூமி மற்றும் சுற்றுச்சூழல் துறையின் பேராசிரியரான ஷிமோன் வோடோவின்ஸ்கி நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கே தங்கியிருந்த பராகுவே ஜனாதியின் உறவினர்கள் உள்பட பராகுவேயைச் சேர்ந்த 51பேரை காணவில்லை என்று கூறப்படுகிறது.

சோபியா லோபஸ் மோரேரா, அவரது கணவர் லூயிஸ் பெட்டன்கில் மற்றும் அவர்களது மூன்று இளம் குழந்தைகள் பற்றிய விவரங்கள் இன்னும் கிடைக்கவில்லை என்று பராகுவே வெளியுறவு அமைச்சகம் உறுதிப்படுத்தி உள்ளது.

ஆர்ஜென்டினாவின் பிரபல பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை நிபுணர் அண்ட்ரஸ் கால்ப்ராஸ்கோனி, அவரது மனைவி மற்றும் புதிதாக தத்தெடுக்கப்பட்ட ஆறு வயது மகள் ஆகியோரையும் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## 10 மாதங்களில் 43 முறை பொசிட்டிவ் முடிவு

# கொரோனாவுடன் மோதி சாதனை படைத்த இங்கிலாந்து முதியவர்!



சிலர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு அதிலிருந்து மீண்டு வந்திருந்தாலும்கூட மேலும் ஒன்றிரண்டு முறை கொரோனா பாதிப்புக்கு ஆளாகியிருக்கலாம். இன்னும் சிலருக்கோ 30நாள்கள் அல்லது 45 நாள்கள் வரை கூட கொரோனாவினுடைய பாதிப்பு இருந்திருந்திருக்கலாம். ஆனால், இங்கிலாந்தைச் சேர்ந்த 72 வயது முதியவர் ஒருவர் 10 மாதங்களாக கொரோனா தொற்றுடன் வாழ்ந்து தற்போது அதில் இருந்து மீண்டு மருத்துவ உலகையே மிரளச் செய்திருக்கிறார். அவரின் உடலில் வைரஸ் இத்தனை காலமாக எங்கு மறைந்து இருந்தது என்பது குறித்து தற்போது ஆராய்ச்சியாளர்கள் மண்டையைப் பிய்த்துக் கொண்டு ஆராய்ந்து வருகின்றனர்.

மேற்கு இங்கிலாந்தின் பிரிஸ்டலைச் சேர்ந்த வாகனச் சாரதிப் பயிற்றுநராக இருந்துவரும் டேவ் ஸ்மித் என்ற 72 வயது முதியவருக்கு கடந்த 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கொரோனாப் பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. ஆனால், அதன் பின்சு 10 மாதங்கள் வரை அவரால் நோய்த் தொற்றில் இருந்து மீளவே முடியாமல் போயுள்ளது.

இத்தனை மாதங்களாக கொரோனா வைரஸ் அவரின் உடலிலேயே தங்கியிருந்துள்ளது. குறிப்பிட்ட காலப்பகுதியில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 43 முறை கொரோனா பொசிட்டிவ் முடிவு வந்துள்ளது. மிகவும் ஆபத்தான நிலைக்குச் சென்றதால் 7 முறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று இவர் வீடு திரும்பியி ருக்கிறார். இருப்பினும் அவர் நோயி லிருந்து மீளாமலே இருந்துவந்துள் ளார்.

முதன் முதலாக வைரஸ் தொற்று இவருக்கு ஏற்படுவதற்கு முன்னதாக, அவர் நுரையீரல் தொற்று மற்றும் லுக்கேமியா ஆகியவற்றில் இருந்து குணமாகியிருக்கிறார். பலவாறாக சிகிச்சை அளித்தும் ஸ்மித்திற்கு கொரோனா நெகட்டிவ் ஆகாததால் மருத்துவர்கள் குழப்பமடைந்தனர். தொடர்ந்து அவருக்கு பலகட்ட சிகிச்சைகள் தரப்பட்டிருக்கின்றன.


கடைசியாக ரீ-ஜெனரான் எனப்படும் நிறுவனம் தயாரித்த செயற்கை அன்டிபாடிகளின் கலவையை 45 நாள்கள் தொடர்ந்து ஸ்மித்துக்குக் கொடுத்துள்ளனர். அதன் முடிவில் தற்போது ஸ்மித் கொரோனாத் தொற்றில் இருந்து மீண்டு வந்துள்ளார். 305 நாட்களுக்குப் பின்னர் ஸ்மித்துக்கு வந்த சோதனை முடிவு நெகட்டிவ் ஆனதால் ம்பெய்ன் போத்தலை உடைத்து அவரும் அவருடைய மனைவியும் மகிழ்ச் சியைக் கொண்டாடி யிருக்கின்றனர்.

சமீபத்தில் பி.பி.சி.தொலைக்காட்சிக்கு அளித்துள்ள பேட்டியில் கணவன் – மனைவி இருவரும் பேசுகையில், பல முறை ஸ்மித் இறந்துவிடுவார் என மனதைத் தேற்றியிருக்கிறேன். இருப்பினும் அவர் தொடர்ந்து மரணத்திலிருந்து மீண்டு வருகின்றமையை வாடிக்கையாக மாற்றிக்கொண்டார். அவருடைய இறுதி ஊர்வலத்துக்குக்கூட ஏற்பாடு செய்து வைத்தோம் என சுவாரஸ்யமாக விவரிக்கிறார் ஸ்மித்தின் மனைவி.

பிரிஸ்டல் பல்கலையின் வைராலஜிஸ்டான அன்ட்ரு டேவிட்சன் கூறுகையில், ஸ்மித்தின் விவகாரம் மிகவும் ஆச்சரியமானதாக இருக்கிறது. அவரின் உடலில் வைரஸ் எங்குதான் இத்தனை காலம் தங்கியிருந்தது என்பது ஆச்சரியத்தின் உச்சத்துக்கே கொண்டு செல்கிறது. ஸ்மித் குறித்து ஆய்வு அறிக்கை விரைவில் மருத்துவ இதழில் வெளியாகும் என அவர் தெரிவித்தார். மேலும், ஸ்மித் தான் உலகிலேயே நீண்ட காலம் நோய்த்தொற்றுக்கு ஆளான நபராக இருக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# பேஸ்புக்கில் ‘ஹா ஹா’ எமோஜி பயன்படுத்துவது பாவமாகும்

## இஸ்லாமியர்கள் இதைச் செய்யக்கூடாது – இஸ்லாமிய மதகுரு




பேஸ்புக்கில் ஹா ஹா இமோஜி பயன்படுத்துபவர்களுக்கு எதிராக ஃபத்வா பிறப்பிக்கலாம் என பிரபல இஸ்லாமிய மதகுரு ஒருவர் தெரிவித்திருப்பது சமூக வலைத்தளங்களில் பரபரப்பான விடயமாக மாறியுள் ளது. ஆரம்பகாலங்களில் பேஸ்புக் போஸ்ட்களுக்கு லைக் அல்லது கமெண்ட் என இரண்டு தெரிவுகளில் மட்டுமே நம்மால் பதில்சொல்ல முடிந்தது. ஆனால் தற்போது சோகம், கோபம், காதல், சிரிப்பு, கருணை என பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடியதாக மேம்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

இதில் ஹா ஹா எனப்படும் சிரிப்புஞ இமோஜி பல நேரங்களில் சர்ச்சைக்குரியதாக மாறியிருக்கிறது. இந்த ஹா ஹா இமோஜி பயன்படுத்துபவர்களுக்கு எதிராக ஃபத்வா பிறப்பிக்கலாம் என பரிந்துரைத்து பரபரப்பைக் கூட்டியிருக்கிறார் வங்கதேசத்தைச் சேர்ந்த இஸ்லாமிய மதகுரு ஒருவர்.

வங்கதேசத்தைச் சேர்ந்த அஹ்மதுல்லா என்ற இஸ்லாமிய மதகுரு, அங்கு மிகவும் பிரபலமான ஒருவராக விளங்கி வருகிறார். ஃபேஸ்புக்கில் தொடர்ச்சியாக பதிவிட்டுவரும் அஹ்மதுல்லாவை, பேஸ்புக்கிலும், யூடியூபிலும் சுமார் 30 லட்சம் பேர் பின்தொடர்ந்து வருகின்றனர். இஸ்லாமிய கருத்துக்களை சமூக வலைத்தளங்களில் வீடியோவாக பேசி வெளியிட்டு வருவதுடன், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் அடிக்கடி பேசிவருவதால் அங்கு பிரபலமானவராக அவர் மாறியிருக்கிறார்.

கடந்த ஜூன் 19 ஆம் திகதி அஹ்மதுல்லா பேஸ்புக்கில் வெளியிட்டுள்ள 3 நிமிட வீடியோவில் பேஸ்புக்கில் ஹா ஹா இமோஜி பயன்பாடு குறித்து பல்வேறு விடயங்களை பகிர்ந்துள்ளார். மக்களை சிரிக்க அல்லது கேலி செய்ய பேஸ்புக்கின் ஹாஹா இமோஜியைப் பயன்படுத்துபவர்களுக்கு எதிராக ஃபத்வா வழங்கவும் அவர் பரிந்துரைத்துள்ளார்.

இது தொடர்பாக அஹ்மதுல்லா கூறுகையில், பேஸ்புக்கில் போஸ்ட்டுக்கு ஹா ஹா இமோஜி போடும்போது, அதனை போஸ்ட் செய்த நபர் நகைச்சுவையாக எடுத்துக் கொண்டால் பிரச்னையில்லை ஆனால் ஹா ஹா எமோஜியை பயன்படுத்தி பிறரை கேலி, கிண்டல் செய்யும் படி இருந்தால், இஸ்லாமை பொறுத்தவரையில் இது பாவம் (ஹராம்). இஸ்லாமின் புனித புத்தகத்தில் நகைச்சுவை என்ற பெயரில் பிறரை கேலி, கிண்டல் செய்யக்கூடாது என கூறப்பட்டுள்ளது என்றார்.

ஹா ஹாரியாக்டைப் பயன்படுத்துவது பேஸ்புக்கில் மிகவும் பொதுவானதாக மாறியுள்ளது, மேலும் ‘ஹா ஹா’ எதிர்வினைகளைப் பயன்படுத்தும் ஒருவர் பாவம் செய்கிறார் என்றும் இஸ்லாம் கேலி செய்வதைத் தடைசெய்கையில் அதைப் பயன்படுத்தக்கூடாது என்றும் அஹ்மதுல்லா அந்த வீடியோவில் விளக்குகிறார். மேலும், எந்தவொரு சூழ்நிலையிலும், ஒருவரைப் பார்த்து சிரிக்க ‘ஹாஹா’ ரீயாக்டை பயன்படுத்துவது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பேஸ்புக்கில் ஹா ஹா எமோஜி குறித்து அஹ்மதுல்லா விளக்கிய வீடியோவினை பல்லாயிரக்கணக்கானவர்கள் பார்த்துள்ள நிலையில் அவரின் வீடியோவுக்கே ஆயிரக் கணக்கானவர்கள் ஹா ஹா தெரிவை இட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 2,700 ஆண்டுக்கு முந்பட்ட மம்மிக்கு சீ.டி.ஸ்கான்

இத்தாலியில், இரண்டாயிரத்து 700 ஆண்டுகளுக்கு முற்பட்ட மம்மியை ஆராய்ச்சியாளர்கள் சி.டி. ஸ்கான் பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

பண்டைய எகிப்திய மதகுருவான அங்கேகோன்சுவின் (Ankhekhonsu)பதப்படுத்தப்பட்ட உடல், மிலனில் (Milan) உள்ள மருத்துவமனையில் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டது. இதன் மூலம் அவரது மரணம் குறித்தும், அவரது உடலைப் பதப்படுத்த எந்த வகையான பொருள்கள் பயன்படுத்தப்பட்டன என்பது குறித்தும் அறியலாம் என ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

# டெல்டா பிளஸ் வகைக் கொரோனாவுக்கு இந்தியாவில் முதல் உயிரிழப்பு; சென்னையிலும் ஒருவருக்குத் தொற்று



இந்தியாவில் டெல்டா பிளஸ் வகை கொரோனாவினால் 40 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இந்திய மத்திய சுகாதாரத்துறைச் செய்திகள் தெரிவிக்கின்றன. மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், கேரளா ஆகிய மாநிலங்களில் இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய பிரதேசத்தில் 5 பேருக்கு டெல்டா பிளஸ் கொரோனா பரவியுள்ளதாகவும் இவர்களில் தடுப்பூசி செலுத்திக்கொள்ளாத பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனவும் மீதமுள்ள 4 பேர் தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள் எனவும் அவர்கள் நலமாக இருக்கின்றனர் எனவும் அம்மாநில சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸான டெல்டா பிளஸ், ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு எளிதில் பரவும் என்பதால் பாதுகாப்பு வழிமுறைகளை முறையாகப் பின்பற்ற வேண்டும் என மருத்துவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இந்தியாவில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலையில் பரவலாகக் காணப்பட்ட டெல்டா உருமாற்றத்தில், மேலும் சில மாற்றங்கள் ஏற்பட்டு அது 'டெல்டா பிளஸ்' ஆக உருவெடுத்தது.

கடந்த வாரம் வரையில் உலகின் 11 நாடுகளைச் சேர்ந்த 197 பேரிடம் இந்த உருமாற்றம் அடைந்த டெல்டா பிளஸ் வைரஸ் கண்டறியப்பட்டது. இந்தியாவில் தற்போது 40 இற்கும் மேற்பட்ட நபர்களுக்கு டெல்டா பிளஸ் உருமாற்ற வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது. அதில் மகாராஷ்ட்டி மாநிலத்தில்தான் 20 இற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

டெல்டா பிளஸ் வகை உருமாற்றத்தின் மூன்று இயல்புகளை இந்திய மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. வேகமாகப் பரவுதல், நுரையீரல் செல்களோடு ஒட்டிக்கொள்ளுதல், நோய் எதிர்ப்புத் தன்மையைக் குறைத்தல் ஆகியவை அந்த வைரஸ் வடிவத்தின் முக்கிய பாதிப்புகள் என அறிவுறுத்தப்பட்டுள்ளன. டெஸ்டா பிளஸ் வைரஸால் ஏற்படும் தீவிர பாதிப்பிலிருந்து தடுப்பூசிகள் பாதுகாப்புத் தரும் என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ்நாட்டிலிருந்து 1,159 மாதிரிகள் மரபணு ஆய்வுக்காக அனுப்பப்பட்டு அவற்றில் 772 மாதிரிகளின் முடிவுகள் கிடைத்துள்ளன. இதில், சென்னையைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு டெல்டா பிளஸ் வகைக் கொரோனா இருந்தமை தெரியவந்துள்ளது. எனினும், அவர் தற்போது குணமடைந்து இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. கொரோனா வைரஸ் திரிவடைந்துகொண்டு பாதிப்புகளை ஏற்படுத்தும் நிலையில், பொதுவாக இரண்டு டோஸ் தடுப்பூசி செலுத்திக்கொள்ளும்போது கொரோனாவுக்கு எதிரான ஆற்றல் அதிகரிக்கும் என்பதால், கொவிஷீல்ட் டோஸ்களுக்கு இடையிலான இடைவெளியை அரசு குறைக்கலாம் என மருத்துவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

# சாட்டை துரைமுருகன்மீது புகார் அளித்தவர் தி.மு.கவில்



திருச்சி மாநகரின் கே.கே.நகரில் உள்ள வாகனங்கள் பழுது நீக்கும் மையத்தின் உரிமையாளரான வினோத், தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆகியோரை அவதூறாக விமர்சனம் செய்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருந்தார். இதையடுத்து, பிரபல யூட்யூப் பதிவர் சாட்டை துரைமுருகனும் நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்தவர்களும் வினோத்தின் நிறுவனத்திற்குச் சென்று அவரோடு வாக்குவாதப்பட்டு, அவதூறு செய்த பதிவை நீக்கிவிட்டு மன்னிப்புக் கேட்கும் பதிவை வெளியிடச் செய்தனர். அதனை காணொலியாகப் பதிவுசெய்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்டிருந்தனர்.

அதன் பின்னர், சாட்டை துரைமுருகன் உள்ளிட்டோர் தன்னை மிரட்டினர் என திருச்சி கே.கே.நகர் காவல் நிலையத்தில் வினோத் புகார் அளித்ததன் அடிப்படையில், சாட்டை துரைமுருகன், நாம் தமிழர் கட்சியின் வினோத், மகிழன் சந்தோஷ், சரவணன் ஆகியோர் கடந்த 11 ஆம் திகதி கைது செய்யப்பட்டு முசிறி கிளைச் சிறையில் அடைக்கப்பட்டனர். அதையடுத்து, திருச்சி இரண்டாவது குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் சாட்டை துரைமுருகன் உள்ளிட்ட நால்வருக்கும் கடந்த 15 ஆம் திகதியன்று பிணை வழங்கப்பட்டது.

அதே நேரத்தில், அமைச்சர் செந்தில்பாலாஜியை மணல் கடத்தலோடு தொடர்புப்படுத்தி அவதூறாகப் பேசினார் என கரூர் மாவட்ட தி.மு.க. வழக்குரைஞர் அணி கொடுத்த புகாரின் பேரில் கரூர் பொலிஸார் பதிவு செய்த வழக்கில் சாட்டை துரைமுருகன் மட்டும் மீண்டும் கைது செய்யப்பட்டு லால்குடி கிளைச் சிறையில் அடைக்கப்பட்டார். முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதியை அவதூறாகப் பேசிய வழக்கி லும் தஞ்சாவூர் மாவட்டம் திருப்பனந்தாள் காவல் நிலைய பொலிசாராலும் துரைமுருகன் மீது கைது ஆணை பெறப்பட்டிருந் தது.

மொத்தமாக 3 வழக்குகளில் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், ஒரு வழக்கில் மட்டும் துரைமுருகனுக்குப் பிணை கிடைத்துள்ளது. மற்ற மூவரும் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், சாட்டை துரைமுருகன் மீது முதலில் புகார் அளித்த திருச்சி கே.கே.நகர் வாகனத் திருத்த நிலைய உரிமையாளர் வினோத், அண்மையில் தி.மு.க.முதன்மைச் செயலாளரும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சருமான கே.என்.நேருவைச் சந்தித்து தி.மு.கவில் இணைந்துள்ளார். இதனை வினோத் தனது முகநூல் பக்கத்தில் படத்தோடு பதிவிட்டுள் ளார். இந்த விடயம், சமூக ஊடகங்களில் இப்போது பகிரப்பட்டு விவாதிக்கப்பட்டுவருகிறது.



# கொரோனாவிலிருந்து மீண்டவர்களுக்கு ஒரு டோஸ் போதுமானதாகும்

இந்தியாவில் ஐ.சி.எம்.ஆர். –அசாம் மருத்துவக் கல்லூரி இணைந்து நடத்திய ஆய்வில், கொரோனாத் தொற்றில் இருந்து மீண்டு வந்தவர்களுக்கு கொவிஷீல்ட் தடுப்பூசியின் ஒரு டோஸ் செலுத்தினாலே போதுமான எதிர்ப்புசக்தி கிடைப்பதாகத் தெரியவந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களது உடலில் இயல்பாகவே எதிர்ப்புச்சக்தி உருவாகியிருப்பதால் ஒரு டோஸ் மட்டுமே அவர்களுக்குப் போதுமானது என அந்த ஆய்வு முடிவு குறிப்பிடுகிறது.

இந்த நிலையில், கொரோனாவை முற்றிலும் கட்டுப்படுத்த சிறுவர்களுக்கும் தடுப்பூசி செலுத்த வேண்டும் என, எய்ம்ஸ் இயக்குநர் ரந்தீப் குலேரியா தெரிவித்துள்ளார். டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் செலுத்தப்பட்டுவரும் சிறுவர்களுக்கான பைஸர் தடுப்பூசியை இந்தியாவுக்குக் கொண்டுவர பேச்சு நடந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# பாலியல் துன்புறுத்தல் வழக்கில் சிவசங்கர் பாபா மீது மேலும் இரு மாணவிகள் புகார்

மாணவிகள் மீதான பாலியல் துன்புறுத்தல் வழக்கில் கைதாகி, தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் சிவசங்கர் பாபா மீது கேளம்பாக்கத்தைச் சேர்ந்த சுசில் ஹரி பாடசாலையில் படித்த மேலுமிரு மாணவிகள்தனித்தனியேபுகார்களைஅளித்துள்ளனர். இதில், தங்களைக் கடத்திச் சென்று பாலியல் துன்புறுத்தல் செய்தார் என சிவசங்கர் பாபா மீது அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதனையடுத்து சிவசங்கர் பாபா மீது கடத்தல் மற்றும்போக்சோசட்டங்களின்கீழ்மேலுமிருவழக்குகளைப் பதிவு செய்த பொலிஸார், அவற்றின்படியும் அவரைக் கைது செய்வதற்கான உத்தரவைப் பெற்றனர். இந்த உத்தரவை நீதிபதி அம்பிகா மற்றும் சென்னை அரசு மருத்துவமனை நிர்வாகத்திடம் சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் ஆவணப்படுத்தினர்.

ஏற்கனவே, மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சிவசங்கர் பாபா மீது மேலும் பல மாணவிகள் புகார் அளித்து வருவது அதிக கவனத்தை ஏற்படுத்தி உள்ளது.

சிவசங்கர் பாபாவை பொலிஸ் காவலில் எடுத்து விசாரித்தால் மட்டுமே, அவரது குற்றச் செயல்கள் குறித்துத் தெரியவரும் என பொலிஸார் கருதுகின்றனர். அவருடன் நேரடித் தொடர்பில் இருந்த ஆசிரியை ஒருவர் மட்டுமே தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.



மேலும் பல ஆசிரியைகள் இந்த வழக்கில் கைது செய்யப்படாமல் உள்ளனரென சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சுசில் ஹரி பாடசாலையில் நடந்த இந்த பாலியல் துன்புறுத்தல் சம்பவங்கள் பெற்றோர் மற்றும் பொதுமக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதால், ஏராளமானோர் அந்தப் பாடசாலையிலிருந்து விலகிச் செல்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அப் பாடசாலையின் மீது கல்வித்துறை உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்எனபலதரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## கஞ்சா போதைப் பொருள் விற்பனை செய்த சிவில் பாதுகாப்பு படை வீரருக்கு விளக்கமறியல்

திருகோணமலை துறைமுக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரையில் கஞ்சா போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த சிவில் பாதுகாப்பு படை வீரரை எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற பிரதம நீதவான் பயாஸ் றஸ்ஸாக் முன்னிலையில் குறித்த சந்தேக நபரை நேற்று முன்தினம் ஆஜர்படுத்தியபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் திருகோணமலை - மிகிந்தபுர பகுதியைச் சேர்ந்த ஏட்டிரியல் ரொஷான் சுமதிபால (38 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை கடற்கரை பகுதியில் இரகசியமான முறையில் கஞ்சா போதைப் பொருள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக துறைமுக பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலை அடுத்து குறித்த சந்தேக நபரை சோதனையிட்டபோது 400 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப் பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே அவரை விளக்கமறிலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



## மட்டக்களப்பில் மேலும் 77 பேருக்கு கொரோனா

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று வியாழக்கிழமை 77 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பிரதி பணிப்பாளர் வைத்தியர் என்.மயூரன் தெரிவித்தார்.

நேற்றைய தொற்றாளர் விவரம் - சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக வெளியிடப்பட்டுள்ளது .மட்டக்களப்பு - 22 ,களுவாஞ்சிகுடி - 03,காத்தன்குடி -12,கோறளைப்பற்று மத்தி- 13,ஏறாவூர் -09

வாகரை -04,வாழைச்சேனை-05,கிரான்-02,முப்படை -01,பட்டிப்பளை- 02,வெல்லாவெளி- 04 என மொத்தம் 77 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது .

## கொரோனா சட்டத்தை மீறிய மருந்தகம் சீல் வைக்கப்பட்டது



காத்தான்குடி பகுதியில் மாலை 6 மணியுடன் மருந்தகங்கள் மூடப்பட வேண்டுமென்ற கொவிட் தடுப்பு செயலணியின் அறிவிப்பை மீறி இரவு நேரத்திலும் திறக்கப்பட்டிருந்த மருந்தகமொன்றுக்கு நேற்றிரவு சுகாதார அதிகாரிகளால் சீல் வைக்கப்பட்டது.

காத்தான்குடி சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதால் அத்தியாவசிய வர்த்தக நிலையங்களை மாத்திரம் மாலை ஆறு மணி வரை திறக்குமாறு காத்தான்குடி கொவிட் செயலணி வேண்டுகோள் விடுத்திருந்தது.

குறித்த வேண்டுகோளை மீறி மாலை ஆறு மணிக்குப் பின்னரும் திறந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட மருந்தகத்துக்கே இவ்வாறு சீல் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேங்காய் திருடர்கள் வசமாக மாட்டினர்

### ஓட்டமாவடியில்

தேங்காய் திருடிய இருவரை தோட்ட உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற் றுள் ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடியில் அமைந்துள்ள தென்னந்தோட்டத்தில் மூவர் சேர்ந்து தேங்காய் திருடியபோது அவர்களில் இருவர் பிடிக்கப்பட்ட நிலையில் ஒருவர் தப்பியோடியுள்ளார்.

தங்களது தோட்டத்தில் தேங்காய்கள் இவ்வாறு தொடர்ந்தும் திருடப்படுவதனை அவதானித்த தென்னந்தோட்ட உரிமையாளர்கள் காத்திருந்து கண்காணித்தபோது இத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட இருவரை பொதுமக்களின் உதவியுடன் மடக்கிப் பிடித்தோம் என தோட்ட உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

## இலங்கை, அமெரிக்கா, ஜப்பான் ஒன்று சேர்ந்து கிழக்கில் கூட்டுக் கடற்பயிற்சி நடவடிக்கை!



இலங்கை, அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் கடற்படையினர் பங்குகொள்ளும் கூட்டு கடற்பயிற்சி நடவடிக்கை திருகோணமலை கடற்படை தளத்தில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானது.

நீர்வழி தயார் நிலை, ஒத்துழைப்பு மற்றும் பயிற்சி தொடர்பான கூட்டுப் பயிற்சி (Cooperation Afloat Readiness and Training Exercise-2021 (CARAT-21) மூன்று கட்டங்களாக எதிர்வரும் 30ஆம் திகதி வரை திருகோணமலை துறைமுக மற்றும் கிழக்கு கடற்பரப்பில் நடைபெறவுள்ளது.

பயிற்சியின் போது துறைமுகம் சார்ந்த பயிற்சிகள் ஜூன் 24 மற்றும் 25 ஆகிய திகதிகளில் திருகோணமலை துறைமுகத்தில் செயற்கை நிரை அமைப்பில் நடைபெறும் அதேவேளை, அதன் கடல் சார்ந்த பயிற்சிகள் ஜூன் 26 முதல் 30 வரை திருகோணமலையில் நடைபெறவுள்ளன என கடற்படை தெரிவித்துள்ளது.

கடல்சார் ஈடுபாடு மற்றும் இயங்குதளத்தை மேம்படுத்துதல், பகிரப்பட்ட கடல்சார் சவால்களில் மேலும் ஒருங்கிணைப்பை வளர்ப்பது, செயல்பாட்டு சூழல், விதிமுறைகள் மற்றும் தரநிலைகள் குறித்து நன்கு புரிந்துகொள்வது, கடல்சார் கூறுகள் மற்றும் சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு இடையிலான தொடர்புகளை எளிதாக்குதல், கடல்சார் பரஸ்பர திறனை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் சர்வதேச சட்டத்திற்கு ஏற்ப செயல்படுதல் என்பன பயிற்சியின் முக்கிய நோக்கங்களில் அடங்கும் என கடற்படை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் 7ஆவது கடற்படை குழுமம் மற்றும் ஜப்பானிய கடல்சார் தற்காப்பு படை, இலங்கை கடற்படை ஆகியவற்றுக்கிடையில் மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த நிவாரணம், கடல்சார் கள விழிப்புணர்வு, கடல்சார் விமானப் போக்குவரத்து, கடலில் நிரப்புதல், மேற்பரப்பு டிராக்கெக்ஸ், வருகை வாரிய தேடல் மற்றும் பறிமுதல் மற்றும் தேடல் மற்றும் மீட்பு உள்ளிட்ட பல்வேறு கூட்டு பயிற்சி வாய்ப்புகள் இடம்பெறவுள்ளன.

இந்த கூட்டுப் பயிற்சியில் இலங்கை கடற்படையின் ஆழ் கடல் ரோந்து கப்பல்களான சயுரல, கஜபாஹு, ஆகிய கப்பல்களும் இலங்கை விமானப்படையின் பெல் 212, 412 ரக ஹெலிக்கொப்டர்கள், பி 200 ரக பீச் கிராப்ட் விமானம், அமெரிக்காவின் 7ஆவது கடற்படை குழுமத்திற்குச் சொந்தமான யூஎஸ்எஸ் சார்ள்ஸ்டன் கப்பல், பி-8 பொசிடன் போயிங் கடல் சார் ரோந்து விமானம் மற்றும் எஸ்எச்-60 ரக ஹெலிக்கொப்டர் ஆகியவற்றுடன் ஜப்பான் கடற் படையின் ஜேடிஎஸ் யூகிரி நாசகாரி கப்பல் மற்றும் எம் எச் -60ஆர் ஹெலிக்கொப்டர் ஆகியன பங்கெடுக் கின்றன எனக் கடற்படை மேலும் தெரிவித்துள்ளது.

இந்த கூட்டுப் பயிற்சியின் அங்குரார்ப்பண நிகழ்வில் இலங்கை கடற்படையின் பிரதிப் பிரதம அதிகாரியும் கிழக்கு கடற்பிராந்திய கட்டளைத் தளபதியுமான ரியர் அட்மிரல் வை. என். ஜயரட்ண, இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் கடற் படை பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கொ மாண்டர் ரிச்சர்ட் லிஸ்டெர் உட்பட உயர் அதிகாரிகள் கலந்து சிறப்பித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர்

## நொக்-அவுட் சுற்றில் பங்கேற்கும் 16 அணிகளின் விவரம்




| | | | | |
|---|---|---|---|---|
| 26 Jun , 9:30 pm | Wales | VS | Denmark |
| 27 Jun , 12:30 am | Italy | VS | Austria |
| 27 Jun , 9:30 pm | Netherlands | VS | Czech Republic |
| 28 Jun , 12:30 am | Belgium | VS | Portugal |
| 28 Jun , 9:30 pm | Croatia | VS | Spain |
| 29 Jun , 12:30 am | France | VS | Switzerland |
| 29 Jun , 9:30 pm | England | VS | Germany |
| 30 Jun , 12:30 am | Sweden | VS | Ukraine |

உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரைப் போலவே அதிக ரசிகர்களை ஈர்க்கும் யூரோ கிண்ணத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இதில், மொத்தம் 24 அணிகள் பங்கேற்றன. இந்த 24 அணிகளை ஒரு பிரிவுக்கு நான்கு அணிகள் வீதம் 6 பிரிவுகளாக்கப்பட்டு லீக் சுற்றுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இவற்றில் ஒவ்வொரு பிரிவிலும் அதிக புள்ளிகளைப் பெற்ற 2 அணிகள் வீதம் 12 அணிகள் முதல் கட்டமாகத் தெரிவாகின. ஏ பிரிவிலிருந்து இத்தாலி, வேல்ஸ், பி பிரிவிலிருந்து பெல்ஜியம், டென்மார்க். சி பிரிவிலிருந்து நெதர்லாந்து, ஒஸ்திரியா, டி பிரிவிலிருந்து இங்கிலாந்து, குரோசியா, இ பிரிவிலிருந்து சுவீடன், ஸ்பெயின், எஃப் பிரிவில் இருந்து பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி அணிகள் காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குள் நுழைந்தன.

இவற்றுக்கு அடுத்தபடியாக, லீக் சுற்றுப் போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இன்னும் நான்கு அணிகளும் புள்ளிகள் அடிப்படையில் அந்தச் சுற்றுக்குத் தெரிவாகியுள்ளன. அவை, ஏ பிரிவிலிருந்து சுவிட்ஸர்லாந்து, சி பிரிவிலிருந்து உக்ரைன், டி பிரிவிலிருந்து செக் குடியரசு, எப் பிரிவிலிருந்து போர்த்துக்கல் ஆகிய அணிகளே அவையாகும். இதையடுத்து மொத்தம் 16 அணிகள் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் நடைபெறவுள்ள போட்டிகளில் பங்கேற்கின்றன.

விலகல் (நொக்-அவுட்) முறையில் நடைபெறும் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் அணிகள் ஒன்றையொன்று எதிர்கொள்ளும் விவரம்

**வேல்ஸ் - டென்மார்க்**
**இத்தாலி - ஒஸ்திரியா**
**நெதர்லாந்து - செக் குடியரசு**
**பெல்ஜியம் - போர்த்துக்கல்**
**குரோசியா-ஸ்பெயின்**
**பிரான்ஸ்-சுவிட்ஸர்லாந்து**
**இங்கிலாந்து-ஜேர்மனி**
**சுவீடன்-உக்ரைன்**

26 ஆம் திகதி முதல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் வெற்றிபெறும் 8 அணிகள் காலிறுதிப் போட்டிகளில் பங்கேற்கும்.

# மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையின் இயக்குநர் குழுவில் டரன் சமி



மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையின் இயக்குநர்களில் ஒருவராக முன்னாள் அணித் தலைவர் டரன் சமி நியமிக்கப்பட்டுள்ளார்.

37 வயதான சமி, மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக 38 டெஸ்ட்கள், 126 ஒருநாள், 68 ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ளார். இறுதியாக 2017 இல் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக அவர் விளையாடியிருந்தார். அவர் தலைமையில் ரி-20 உலகக் கிண்ணத்தை 2012, 2016 என இருமுறை மேற்கிந்தியத்தீவுகள் அணி வென்றுள்ளது.

பாகிஸ்தானுக்கு மீண்டும் சர்வதேச கிரிக்கெட் அணியொன்றை அழைத்துச் சென்றமைக்காக பாகிஸ்தானின் பொதுமகனுக்குரிய உயரிய விருதான நிநான்-இ- பாகிஸ்தான் விருதும், பாகிஸ் தானுக்குரிய கௌரவ குடியுரிமையும் இவருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 2017 முதல் 2020 வரை பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் பெசாவர் சல்மி அணிக்காக விளையாடிய இவர், தற்போது அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளராகச் செயற்பட்டுவருகிறார்.

இந்த நிலையில், மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபையின் உறுப்பினர் அல்லாத இயக்குநர்களில் ஒருவராக டரன் சமி நியமிக்கப்பட்டுள்ளார். மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையின் தலைவர் ரிக்கி ஸ்பெரிட், கிரிக்கெட் சபையின் முடிவுகளில் டரன் சமியின் ஆலோசனைகள் மிகவும் உதவியாக இருக்கும். தேவையான கேள்விகளை சமி எழுப்ப வேண்டும். எங்களுக்கு நல்ல யோசனைகளையும் தீர்வுகளையும் அவர் சொல்லவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# ரி—20 தொடரைக் கைப்பற்றியது இங்கிலாந்து!


இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது ரி-20 போட்டியில் இங்கிலாந்து அணி டக்வர்த் லுயிஸ் முறைப்படி 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை, ஒரு போட்டி மீதமிருக்கும் நிலையிலேயே இங்கிலாந்து அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

கார்டிப் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 111 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. குசல் மெண்டிஸ் 39 ஓட்டங்களையும் குசல் பெரேரா 21 ஓட்டங்களையும் எடுத்தனர். இங்கிலாந்து அணியின் அடில் ரஷிட் மற்றும் மார்க்வுட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இங்கிலாந்து அணி, தனது ரி-20 போட்டிச் சரித்திரத்தில் பவுண்டரிகள் அடிக்கப்படாத முதல் பவர்பிளே ஓவர்களை இந்தப் போட்டியில் வீசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனைத்தொடர்ந்து 112 என்ற வெற்றி இலக்கை நோக்கி இங்கிலாந்து அணி களமிறங்கவிருந்தபோது மழை குறுக்கிட, டக்வர்த் லுயிஸ் முறைப்படி போட்டி 18 ஓவர்களுக்குக் குறைக்கப்பட்டு, 103 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதனை நோக்கிக் களமிறங்கிய இங்கிலாந்து அணி, 16.1 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து, வெற்றி இலக்கையடைந்தது. லியாம் லிவிங்ஸ்டொன் ஆட்டமிழக்காது 29 ஓட்டங்களையும் சாம் பில்லிங்ஸ் 24 ஓட்டங்களையும் பெற்றனர். இலங்கை அணியின் வனிந்து ஹசரங்க 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணியின் லியாம் லிவிங்ஸ்டொன் தெரிவானார்.

இவ்விரு அணிகளுக்குமிடையிலான இறுதி ரி-20 போட்டி நாளைய தினம் சௌத்தாம்ப்டனில் நடைபெறவுள்ளது.



# உகண்டா ஒலிம்பிக் அணியில் மேலும் ஒருவருக்கு கொரோனாத் தொற்று

ஒலிம்பிக் போட்டிக்காக ஜப்பானுக்குச் சென்றிருக்கும் உகண்டா அணியில் மேலும் ஒருவருக்குக் கொரோனாப் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதாக உள்ளூர் சுகாதார அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்காக ஜப்பான் சென்றடைந்த 9 பேர் கொண்ட உகண்டா அணியின் பயிற்சியாளருக்கு கொரோனாத் தொற்று இருப்பது விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தெரிய வந்ததையடுத்து உடனடியாக அவர் தனிமைப்படுத்தப்பட்டார்.

இந்த நிலையில் உகண்டா அணியில் மேலும் ஒருவருக்கும் கொரோனாப் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதாக உள்ளூர் சுகாதார அதிகாரி தெரிவித்துள்ளார். இதையடுத்து அந்த நபரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அவரது பெயர் விவரம் வெளியிடப்படவில்லை. அவருடன் நெருக்கமாக இருந்த மற்றவர்களும் ஜுலை 3 ஆம் திகதி வரை தனிமைப்படுத்திக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர் எனவும் குறித்த சுகாதார அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

கொரோனாத் தொற்றின் காரணமாக இந்த வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒலிம்பிக் போட்டிகள் அடுத்த மாதம் ஜப்பானில் ஆரம்பமாகவுள்ளன. தற்போது ஜப்பானிலும் தொற்று தீவிரமாகப் பரவிவருவதால், ஒலிம்பிக்கை நடத்தவேண்டாம் என்று உள்நாட்டில் பல தரப்பினரும் எதிர்ப்புக்குரல் எழுப்பிவருவது குறிப்பிடத்தக்கது.

# அரசியல் கைதிகள் இருக்கின்றார்கள் என்பதை அரசு ஒத்துக்கொண்டுள்ளது

## செல்வம் எம்.பி. கூறுகிறார்



அரசியல் கைதிகள் இருக்கின்றார்கள் என்பதை, 16 பேரை விடுதலை செய்தமையின் ஊடாக அரசாங்கம் ஒத்துக்கொண்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மேலும் நல்லாட்சியில் கூட அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக சிறந்த செயற்பாடு இடம்பெறவில்லை என்பது கவலை அளிக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் செல்வம் அடைக் கலநாதன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

பல வருடங்களாக சிறையில் இருந்த தமிழ் அரசியல் கைதிகள் சிலர் விடுதலை செய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சியைத் தருகின்றது.

இதேபோன்று ஏனைய அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அவர்களின் குடும்பங்கள் அவர்களுக்காக காத்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

மேலும் அரசியல் கைதிகள் இருக்கின்றார்கள் என்பதை அரசாங்கம் தற்போது ஒத்துக்கொண்டுள்ளது. அதனடிப்படையிலேயே 16 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். நல்லாட்சியில் கூட அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் இடம்பெறவில்லை என்பது கவலை அளிக்கின்றது.

ஆகவே, ஜனாதிபதிக்கு இந்த விடயத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனா உயிரிழப்புகள் பதிவு இரு வாரத்தில் குறைவடையும்!

## சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தகவல்



நாட்டில் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு கொரோனாத் தொற்றால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்த நிலையிலேயே காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

புதிய கொரோனா வைரஸ் திரிவுகளின் மூலம் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை 55 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா அறிகுறிகள் ஏற்பட்டு இரண்டு வாரங்களின் பின்னர் உயிரிழப்புகள் பதிவாகும் நிலையே காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும், அதிக அளவிலான கொரோனா உயிரிழப்புகள் பதிவாகும் நிலை இரண்டு வாரத்தில் குறைவடையும் எனவும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

# தங்காலை கால்டன் இல்லத்தில் சில் வழிபாட்டில் ஈடுபட்டார் பிரதமர்



கொவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில் வீட்டிலிருந்தவாறு சமய வழிபாடுகளில் ஈடுபடுமாறு வழங்கப்பட்ட ஆலோசனைக்கமைய புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும், கௌரவ பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ பொசன் பூரணை தினமான நேற்று (வியாழக்கிழமை) காலை தங்காலை கால்டன் இல்லத்தில் சில் வழிபாட்டில் ஈடுபட்டார்.

தங்காலை வனவாசி குடா விகாரையின் வணக்கத்திற்குரிய பொல்வத்தே பேமானந்த தேரரால் சில் வழிபாடு நடத்தப்பட்டது.

பௌத்த சமயத்தின் சிறந்த உள்ளார்த்தத்தை சரியாக உணர்ந்து, புத்த பொருமானின் தத்துவத்துக்கு ஏற்ப எதிர்கால வாழ்க்கையைத் திட்டமிடுவதற்கு இந்த காலப்பகுதி மிகவும் முக்கியமாகும் என பிரதமர் பொசன் பூரணை தினத்தை முன்னிட்டு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியிலும் குறிப்பிட்டிருந்தார்.



# வடக்கு மாகாண ஆடைத் தொழிற்சாலைகளுக்கு சுகாதாரப் பிரிவு ஊடாக தடுப்பூசி ஏற்றப்படவில்லை

## மாகாண பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரன் தெரிவிப்பு

வடக்கு ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்களுக்கு சுகாதாரப் பிரிவினருக்கு ஊடாக தடுப்பூசிகள் ஏற்றப்படவில்லை என வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். வவுனியா உள்ளிட்ட சில பகுதிகளில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுபவர்களுக்கு நேற்று(வியாழக்கிழமை) முதல் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இது தொடர்பாக அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடமாகாணத்தில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு தடுப்பூசிகள் எமக்கு ஊடாக ஏற்றப்படவில்லை. அவை நேரடியாக ஏற்றப்படுகின்றன. அவை இராணுவத்தினர் ஊடாக ஏற்றப்படுகின்றன என அறிகின்றேன் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, வவுனியா ஆடைத் தொழிற்சாலையிலும் தடுப்பூசிகள் ஏற்றப்படும் நிலையில் அது தொடர்பாகத் தமக்கு எதவும் தெரியாது என வவுனியா சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். இருப்பினும் இராசேந்திரகுளம் ஆடைத் தொழிற்சாலையில் பிராந்திய தொற்று நோயியலாளர் வைத்தியர் லவனும் இராணுவத்தினருடன் இணைந்து தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கையில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# வவுனியாவில் 8 சிறுவர்கள் உட்பட 25 பேருக்கு கொவிட் தொற்றுறுதி

வவுனியாவில் 8 சிறுவர்கள் உட்பட 25 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள், வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் வியாழக்கிழமை இரவு வெளியாகின.

அதில், மதவுவைத்தகுளம் பகுதியில் ஒருவருக்கும், நந்திமித்திரிகம பகுதியில் ஒருவருக்கும், தரணிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், சிவபுரம் பகுதியில் ஒருவருக்கும், கற்குளம் பகுதியில் நான்கு பேருக்கும், பெரிய கோமரசன் குளம் பகுதியில் நான்கு பேருக்கும், ரம்பாவ பகுதியில் ஒருவருக்கும், நெடுங்கேணி பகுதியில் ஆறு பேருக்கும், மறவன்குளம் பகுதியில் இருவருக்கும், மணியர்குளம் பகுதியில் மூவருக்கும், சகாயாமாதாபுரம் பகுதியில் ஒருவருக்கும் என 25 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# மரண தண்டனைக் கைதிகள் 76 பேர் உணவு தவிர்ப்பு போர்

மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மரண தண்டனை கைதிகள் 76 பேரும் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த கைதிகள் நேற்று (வியாழக்கிழமை) முதல் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரான சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட நாளிலிருந்து தங்களுக்கான தண்டனையை ஆயுள் சிறைத்தண்டனையாக மாற்றுமாறு இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்நிலையில் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை நிறைவுக்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகள் சிறைச்சாலை மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியாவில் கொவிட் தீவிரமடைந்ததையடுத்து தொற்று நீக்கும் செயற்பாட்டில் இராணுவத்தினர்

வவுனியாவில் கொவிட் பரவல் தீவிரமடைந்துள்ளதையடுத்து வன்னி பாதுகாப்புப் படை தலைமையக தளபதியின் அறிவுறுத்தலுக்கமைய இராணுவத்தினர் நேற்று (வியாழக்கிழமை) வவுனியா நகரின் பொது இடங்கள் மற்றும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் தொற்று நீக்கும் செயற்பாட்டை முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா நகரப் பகுதியின் பஸ் தரிப்பிடம், நலன்புரி மையங்கள், அரசு மற்றும் தனியார் வங்கிகள், சந்தைகள், மக்கள் கூடும் இடங்கள், ஓட்டோ தரிப்பிடங்கள் போன்ற பொது இடங்களில் தொற்று நீக்கம் செய்யப்பட்டது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், நகர சபை பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடன் மேற்படி திட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் நகரசபை தீயணைப்பு வாகனத்தின் உதவியுடன் தண்ணீர் பாய்ச்சியும் பகுதிகள் சுத்தம் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.